
# அரசும் தமிழும்

(1977 - 83)



ஒப்பிலா. மதிவாணன்

# அரசும் தமிழும்

## [1977 - 83]


ஒப்பிலா. மதிவாணன்

எம்.ஏ., எம்.ஃபில்., டிப்.இன்.லிங்.



14—4—1986

உலகத் தமிழ்ச் சங்கத் தொடக்க விழா

வெளியீடு

மதுரை

முதற்பதிப்பு—ஏப்ரல், 1986.

உரிமை: தமிழ்ச் சுரங்கம், மதுரை.

**விலை: ரூ. 18-00**

கிடைக்குமிடம் :

தமிழ்ச் சுரங்கம்
26, கற்பக விநாயகர் காலனி,
கே. புதூர், மதுரை – 7

பாரி நிலையம்
184, பிராட்வே, சென்னை – 1
திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
பிராட்வே. சென்னை - 1

பாரதி பதிப்பகம்
தெற்கு உஸ்மான் சாலை
தி. நகர், சென்னை – 17

அச்சிட்டோர் :

எவியன் அச்சகம். சென்னை - 600 014.

ஒப்பிலா. மதிவாணன்,
எம் ஏ., எம்.பில்., டிப்.இன்.லிங்.

## என்னுரை

உலக மொழிகளில் மூத்த மொழி–செம்மாந்த மொழி தமிழ் மொழியே என்று அறிஞருலகம் பேசுகிறது. அத்தமிழ் மொழியின் வளர்ச்சி நிலைகளை அளவிட்டுப்பார்த்து, நிறைகுறைகளைக் கண்டறிந்து, மேலும் மொழிக்கு வலிமை சேர்க்க வேண்டிய வழிமுறைகளைச் செய்யவேண்டியது நமது கடமையாகும். பல்துறை ஆற்றல்களும் செயல் பட்டால்தான் ஒரு மொழி வளர்ச்சியடைய முடியும். அச் சக்தி வாய்ந்த ஆற்றல்களின் பெரும் பங்கு, அந்நாட்டை ஆளுகின்ற அரசுக்கு உண்டு என்றால் அது மிகையன்று. சங்ககாலம் தொடங்கி விடுதலைக் காலம் வரையிலும், அதற்குப் பின்னரும் தமிழ் எழுந்த – வளர்ந்த நிலைகளைப் பற்றி, தமிழறிஞர்களும் வரலாற்றாசிரியர்களும் ஆய்ந் தெழுதியுள்ளனர். ஆனாலும் விடுதலைக்குப் பின் அமைந்த அரசுகளால் தமிழ் வளர்ந்த போக்கு, தமிழின் நிலை உயர்த்தப்பட்ட பாங்கு, பல்வேறு அரசுகளும் தமிழோடு கொண்டிருந்த நல்லுறவு ஆகியவற்றை ஆராய்ந்திட வேண்டும் என்கின்ற வேட்கை என்னுள்ளத்தில் எழுந்தது. ‘எங்கும் தமிழ் எதிலும் தமிழ்’ என்ற ஒலி கேட்டேன். அவ்வொலி அசரீரி இல்லை என்று உணர்ந்ததும், அவ்வொலிக் குரிய ஆதாரங்களை ஆய்ந்து, தமிழ் முன் வைக்க வேண்டும் என்று விழைவு கொண்டேன்.

தமிழகத்தை அரசோச்சிய ஒவ்வோர் அரசின் தமிழ்த் தொண்டுகளைப்பற்றி பல்வேறு அறிஞர்கள் எழுதியுள்ளனர் பல ஆசிரியர்கள் சங்ககால அரசர்கள் செய்த தமிழ்ப் பணி பற்றியும், தி. வை. சதாசிவப்பண்டாரத்தார், சங்க மருவிய காலத்தில் ஆட்சி புரிந்தவர் செய்த தமிழ்ப்பணி பற்றியும், சோழர் காலத் தமிழ்ப்பணி பற்றியும், டாக்டர்

இராஜமாணிக்கனார், பல்லவர் செய்த தமிழ்ப்பணி பற்றியும், அ. கி. பரந்தமனார் அவர்கள், நாயக்கர் காலத் தமிழ்ப்பணி பற்றியும், பல ஆசிரியர்கள் ஆங்கிலேயர் காலத் தமிழ்ப்பணி பற்றியும் எழுதியுள்ளனர். விடுதலைக்குப் பின் ஆட்சி செய்த அரசுகள் செய்த தமிழ்ப்பணிகள் ஆராயப்படவில்லை.

பல ஆசிரியர்கள், பல மதத்தினர்-இனத்தினர் செய்த தமிழ்த்தொண்டுகளைக் குறிப்பிட்டு எழுதியுள்ளனர். சமணமும் தமிழும், பௌத்தமும் தமிழும், இசுலாமியமும் தமிழும், கிறிஸ்துவமும் தமிழும் முதலிய தலைப்புகளில் வந்த நூல்களைக் குறிப்பிடலாம்.

விடுதலைக்குப் பின் ஏழு ஆண்டுக் காலம் (1977–83) நடைபெற்ற பணிகள் என் நோக்கில் கணிக்கப்படுகின்றன. இவ்வாண்டுகளுக்கு முன்னும் பின்னும் ஏற்பட்டுள்ள வளர்ச்சி நிலைகளை, பிற ஆய்வாளர்கள் ஆய்விற்கு மேற்கொள்ளலாம்.

எனவே, எம். பில். பட்டத்திற்கு நான் மேற்கொண்ட 'அரசும் தமிழும்' என்ற இந்த ஆய்வு, குறுகிய காலத்தில் ஆய்வை நிறைவேற்ற வேண்டியிருந்ததாலும், இப்போது ஆட்சியில் இருக்கும் அரசின் தமிழ்ப்பணிகளை ஆய்வதே பொருத்தம் என்று தோன்றியதாலும், மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அரசைக் களமாக வைத்துக்கொண்டு, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் என் ஆய்வைச் செய்து முடித்தேன். அவ்வாய்வேடே, வியத்தற்குரியதையும் செயற் கரியதையும் செய்வதை இலக்கணமாகக் கொண்ட என் பேராசிரியர் கலைமாமணி டாக்டர் ஆறு. அழகப்பன் அவர்களின் அருளுள்ளத்தால், நூல்வடிவம் பெற்றுத் தமிழ் மனங்களில் இடம்பெற வந்துள்ளது.

ஆய்வுக்குத் தேவையான செய்திகளை வழங்கிய தமிழறிஞர்கள், அமைச்சர் பெருமக்கள், அரசியலறிஞர்கள், அரசுத்துறைச் செயலர்கள், இயக்குநர்கள். பத்திரிகை ஆசிரியர், நெறியாளர் மற்றும் அரசு அலுவலர்கள் யாவருக்கும் எனது நன்றியினை உரித்தாக்குகிறேன். இப்பெருமக்களின் உதவிக்கும், தமிழ் வளர்ச்சித் துறை அலுவலர்களின் முழு ஆதரவுக்கும் ஒத்துழைப்புக்கும் என்றும் நன்றியுடையேன்

தமிழக அரசு, தமிழுக்காகவும் மேம்பாட்டிற்காகவும் தமிழருக்காகவும் தமிழர் நலனுக்காகவும் செயலாற்றி வருகிறது; வேறு எந்த மாநிலமும் தனது மொழியில் பல்கலைக் கழகம் காணாத நிலையில், முதன் முதலில் 'தமிழ்ப் பல்கலைக் கழகம்' தோற்றுவித்து, பிற மாநிலத்திற்கு முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது. இவ்வரசின் தமிழ்ச் சாதனைகளுள் ஒப்பற்றதும் உயர்வானதும் 'உலகத் தமிழ்ச் சங்கம்' தொடங்கப்பெறுவதாகும். இச்செயல், தங்கத்தில் பதித்த வைரம் போன்று ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறது. புரட்சித் தலைவர் தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களால் மாமதுரையில், 14–4–86 அன்று தொடங்கி வைக்கப்படும் 'உலகத் தமிழ்ச் சங்க விழா' வன்று இந்நூல் வெளியிடப்படுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

எனது ஆய்வேட்டை நூலாக வெளியிடுவதற்கு அனுமதி வழங்கிய அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிக்குழுவிற்கும் துணைவேந்தர்–பேராசிரியர்–நாவரசர் சை. வே. சிட்டிபாபு அவர்களுக்கும் பணிவான நன்றியினைப் புலப்படுத்திக் கொள்கின்றேன்.

எனது இம்முதல் நூலை அழகிய முறையில் அச்சிட்டுத் தந்த ஏஷியன் அச்சகத்தாருக்கும், இந்நூல் சிறப்பாக அமைய உதவிய நல்லோருக்கும் நன்றியுடையேன்.

ஒப்பிலா. மதிவாணன்

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| முன்னுரை | xii |
| **1. தமிழகத்தில் தமிழ்ப்பணி** | |
| 1. தமிழ் ஆட்சிமொழி | 1 |
| 2. தமிழ் வளர்ச்சி—பண்பாடு | 15 |
| 3. தமிழ்க்கலை வளர்ச்சி | 35 |
| 4. தமிழ்ப் பல்கலைக் கழகம் | 47 |
| 5. விழாக்கள் | 64 |
| 6. விருதுகளும் பரிசுகளும் | 74 |
| 7. நிதியுதவி பெறும் நிறுவனங்கள் | 83 |
| **2. அயல் மாநிலங்களில் தமிழ்ப்பணி** | |
| 1. அயல் மாநிலங்களில் தமிழ் வளர்ச்சி | 93 |
| **3. உலகு தழுவிய தமிழ்ப்பணி** | |
| 1. உலகத் தமிழ் மாநாடு | 103 |
| 2. உலகத் தமிழ்ச்சங்கம் | 117 |
| **4. அரசின் தமிழ்க் கொள்கைகள்** | **123** |
| பின்னிணைப்பு | 133 |